**ஏறாவூர்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 07 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஏறாவூர்பற்று பிரதேச சபை இன் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா.22,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்துக்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீதிமன்ற குற்றப் பணமாக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் பெறப்பட்ட ரூபா.2,235,083 தொகை வருமானக் கணக்குக்கு கொண்டு வருவதற்குப் பதிலாக வைப்பு கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபை நிதி வேலைத் திட்டத்தின் கீழ் செங்கலடி பொது நூலகத்தின் வாசிப்பு அறை நிர்மாணிப்பதற்காக ரூபா.1,559,033 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந் நிதியினை பயன்படுத்தி எதுவித வேலைகளும் இடம் பெற்றிருக்காத போதிலும் இத் தொகை நிதிக்கூற்றில் சொத்தாகவும் கடன் கொடுத்தோராகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைக்கு சொந்தமான 15 வாகனங்கள் மற்றும் செயற்திட்டநிறுவனங்களிடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 17 வகையான அலுவலக உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் வேலையைவிட்டு நீக்கிய 15 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா.962,312 ஆனது 2 தொடக்கம் 13 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தது. இது தொடர்பாக சபை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் சந்தைக் கடைகளை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பில் 2009 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள குத்தகைப் ணமாகிய ரூபா.2,555,066 தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல்வேறு தரப்பினர்களுக்கு 1995 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதிக்காகச் செலுத்த வேண்டிய ரூபா.1,882,337 தொகையை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் கடன் கொடுத்தோராக காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுக்கான தொடர்பு | விடயங்கள் |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 134 (1) | பிரதேச சபை எல்லைப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டு பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள். | |
| (i) அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் |

|  |  |
|---|---|
|  | விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.16,949,222 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.14,212,706 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா.2,736,516 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன

அ. சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை |
|---|---|---|---|
|  | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| வாடகைகள் | 4,085 | 5,625 | 4,634 |
| உரிமைக்கட்டணங்கள் | 1,096 | 1,254 | 104 |

ஆ. பிரதேச சபை எல்லைக்குட்பட்ட படமாளிகையொன்றிலிருந்து 2014 பெப்ரவரி தொடக்கம் 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய களியாட்டவரி ரூபா.359,381 தொகையினை அறவிடுவதற்குரிய நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இ. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 156 ஆம் பிரிவுக்கு அமைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் கட்டண விபரங்களை அறிவித்து சபையால் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 12 தனியார் தொலைத் தொடர்பு கோபுரங்கள் மற்றும் விளம்பரப் பலகைகள் தொடர்பாக வரிகள் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபை வருடாந்தம் ரூபா.50,000 தொகையான வருமானத்தை இழந்துள்ளது.

### 2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது வீதவரிகள் அறவீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ஆண்டுப் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததினால் மீளாய்வாண்டிற்காக சபை பாதீடு செய்த ரூபா.1,000,000 வருமானத்தை அறவிட முடியாமல் உள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய முத்திரை தீர்வை ரூபா.20,947,922 தொகையை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்றிறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. பல்லூடக கல்விசார் ஆங்கில நிகழ்ச்சித்திட்டத்தினை (Multi Media Educational Programme) நடத்துவதற்காக பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை (CBG) மூலம் ரூபா.200,000 தொகையும் சபை நிதி மூலம் ரூபா.30,000 தொகையும் ஆக மொத்தம் ரூபா.230,000 செலவில் 2012 ஆம் ஆண்டில் இறுவட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு அவ்வாண்டில் இந்நிகழ்ச்சித் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டில் அது கைவிடப்பட்டதனால் கொள்வனவு செய்யப்பட்ட அவ் இறுவட்டுக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

ஆ. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள ரூபா.1,814,521 கூட்டு மொத்தமாக வாடகை மற்றும் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்காக 12 நபர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்வதற்காக கிழக்கு மாகாண சபையின் சட்டப் பிரிவினது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளாமல் தனிப்பட்ட சட்டத்தரணியொருவருக்கு கொடுப்பனவாக 2013 ஆம் ஆண்டு ரூபா.41,802 செலவிடப்பட்டிருந்த போதிலும் இன்று வரை அந்நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

வெள்ள நீரை வழிந்தோடச் செய்வதற்காக JCB வாகன வாடகை முற்பணமாக ரூபா.300,000 தனிநபர் ஒருவருக்கு 2012 திசெம்பர் 28 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த வேலை பூர்த்தி செய்யப்பட்டதற்கம் வழங்கப்பட்ட முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டதற்குமான சான்றுகள் எதுவும் சபையில் காணப்படவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஓவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 28% தொடக்கம் 100% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

### 4.3 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டில் அனுப்பப்பட்ட இரு கணக்காய்வு ஐய வினாக்களிற்கு 2015 மே 30 வரை பதிலளிக்கப்படவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான விடயங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு